MINISTRY OF EDUCATION

UMAR PULAVAR TAMIL LANGUAGE CENTRE
2, BEATTY ROAD
SINGAPORE 209954

Telephone: 62980781
Telefax: 62984677

Ref: UPTLC/2016/P010

16 மே, 2016

அன்புடைய பெற்றோருக்கு,

1 வணக்கம். உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் பயிலும் மாணவர்களுக்கு நூலக வாரம் நடைபெறவுள்ளது. இவ்வருட நூலக வாரத்தின் கருப்பொருள் சாதனையாளர்களைப் பற்றி அறிதல் ஆகும்.

2 அதன் அடிப்படையில் நூலகதினத்தின் ஓர் அங்கமாகப் புற்றுநோயால் அவதிப்படும் குழந்தைகளுக்கான இயக்கம் பற்றிய விழிப்புணர்வை மாணவர்களிடையே ஏற்படுத்த விழைகிறோம். அதன் பொருட்டு, சிறுவர் புற்றுநோய் அறநிறுவனத்திற்கு (CCF) நிதி திரட்டுவதற்காகச் சாதனை முயற்சியில் ஈடுபட்டுள்ள சிங்கப்பூர் சாதனையாளர் திரு பிரசாட் ஆறுமுகம் அவர்களை நேரில் சந்திக்க ஏற்பாடு செய்துள்ளோம். அவர் தம் சாதனை பற்றிய அனுபவங்களை மாணவர்களிடையே பகிர்ந்து கொள்ளவிருக்கிறார். இளையர் திரு பிரசாட் ஆறுமுகம் அவர்கள் புற்றுநோயால் அவதிப்படும் குழந்தைகளுக்குத் தேவைப்படும் வசதிகளை வழங்கும் பொருட்டுச் சிறுவர் புற்றுநோய் அறநிறுவனத்திற்கு நிதி திரட்டுவதற்காக 'TrekInvicta' என்ற ஒரு சாதனை முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அவர் உலகின் ஆக நீண்ட பாதைகளில் ஒன்றான Pacific Crest Trail என்னும் பாதையில் நீண்ட நெடிய பயணத்தை மேற்கொள்ளவிருக்கிறார். இந்தப் பயணம் ஐந்து மாதங்கள் நீடிக்கக்கூடியது. இந்த முயற்சியில் அவர் வெற்றிபெற்றால் சிங்கப்பூர் வரலாற்றுப் பக்கங்களில் இடம்பிடிப்பார். நிகழ்ச்சி பற்றிய விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| **நிகழ்ச்சியின் நோக்கம்** | உள்ளூர் சாதனையாளர்களைப்பற்றிய விழிப்புணர்வு |
| **நடைபெறும் நாள்** | 24 மே 2016 |
| **இடம்** | உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் |
| **கலந்துகொள்ளும் மாணவர்கள்** | உயர்நிலை 1 முதல் 3 |
| **நேரம்** | பாடவேளை |

3 நம் நிலையத்தின் சார்பில் உங்கள் பிள்ளைகள் இளையர் பிரசாட் ஆறுமுகத்தின் முயற்சிக்கு நிதி உதவி தந்து ஆதரவு அளிக்க விரும்பினால் உங்கள் பிள்ளையிடம் நாங்கள் வழங்கியிருக்கும் அன்பளிப்பு உறையில் (Hong Bao) நீங்கள் விரும்பும் தொகையை அன்பளிப்பாக வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இது கட்டாயம் இல்லை.

4 உங்கள் பிள்ளைகள் மேற்கண்ட நிகழ்ச்சியில் தவறாமல் கலந்துகொள்ள உங்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் தேவை. வரும் 23.05.2016 திங்கட்கிழமையன்று விசாக தின விடுமுறை என்பதால் அன்றைய தமிழ் வகுப்பிற்கு வரும் தங்களின் பிள்ளைகளை 24.05.2016 செவ்வாய்க்கிழமையன்று நிலையத்திற்குத் தவறாமல் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

5 இந்நிகழ்வு குறித்து மேலும் விவரம் அறிய விரும்பினால் நீங்கள் ஆசிரியர் திருமதி மைதிலி அவர்களை 62980781 (Ext:514) என்னும் தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளலாம். நன்றி!

இப்படிக்கு,

அன்புடன்
திரு இரா அன்பரசு
நிலைய இயக்குநர்
உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம்

Dear Parents,

1 Greetings! Library week will be held for students studying in UPTLC from next week. The objective of this year's Library week will be to 'Know more about Achievers'.

2 In conjunction with Library week, we intend to create an awareness of Children's Cancer Foundation (CCF) among our students. As such, we have arranged for Mr Prasatt Arumugam to meet our students to enable them to understand more on what made him embark on the campaign 'TrekInvicta' which is to hike the Pacific Crest Trail. Through this trail, Mr Prasatt hopes to raise funds for CCF so as to support its good work in helping children with cancer and their families. He will be the first Singaporean to hike the Pacific Crest Trail which is one of the longest trails in the world. It will take close to five months to complete. He will be the first Singaporean to accomplish this feat.

3 In an attempt to support Mr Prasatt's campaign, we have distributed each student a 'Hong Bao' packet.You may place the desired amount in the 'Hong Bao' packets if you wish to do so. Contribution is optional.

4 Please be informed that students who are to attend lessons on 23 May 16 (Monday) which is a holiday in lieu of Vesak Day, will attend their Tamil lessons on 24 May 16 (Tuesday).

5 For more information regarding this programme, please feel free to contact Mrs Mythily at 62980781(Ext 514).

Thank you

In Partnership

Mr Anbarasu Rajendran

Centre Director